# பத்திரிக்கைச் செய்தி

2020ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இணைய வழி சேர்க்கை மூன்று கட்டமாக நடைபெற்றது. எனினும் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அரியலூர் மற்றும் ஆண்டிமடம் ஆகிய இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் இடங்கள் காலியாக உள்ளன.

எனவே, 16.01.2021 வரை இந்த இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நேரடிச்சேர்க்கை நடைபெற உள்ளது. எனவே, மாணவர்கள் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு உடனடியாக நேரில் சென்று தாங்கள் சேர விரும்பும் தொழிற்பிரிவினை தேர்ந்தெடுத்து பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு அரியலூர் தொழிற்பயிற்சி நிலையத்தை 9442478574 என்ற எண்ணிலும், ஆண்டிமடம் தொழிற்பயிற்சி நிலையத்தை 9442175043 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என அரியலூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.ந.நாகராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.